# முல்/ஒலுமடு தமிழ் வித்தியாலயம்

முதலாம் தவணைப் பரீட்சை

தரம் 8 — தமிழ் மொழியும் இலக்கியமும் — நேரம்: 2மணி

பகுதி I

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1) மகன் தனது சுயபுராணத்தை விரிக்க சமயம் பார்த்துக்கொண்டிருந்தான். இங்கு **சுயபுராணம்** என்பதன் கருத்து
   1. பெரியபுராணம் 2. கந்தபுராணம் 3. சொந்தக்கதை 4. இராமாயணம்

2) ஆகாயம் என்பதைக் **குறிக்காத** சொல்
   1. வானம் 2. விசும்பு 3. விண் 4. பரிதி

3) வாழையின் இளையது குட்டி என்பது போல **நெல்லின்** இளையது
   1. வடலி 2. பிள்ளை 3. நாற்று 4. கன்று

4) பாடகனுக்கு பாடகி போல **கணவனுக்**கு
   1. மனைவி 2. கணவி 3. பாணன் 4. உபாத்தியாயன்

5) பின்வருவனவற்றுள் **காரணப்** பெயராக அமைவது
   1. மரம் 2. மலை 3. கணக்காளன் 4. நாற்காலி

**இடைவெளிக்குப் பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்க.**

6) காற்றினால் மரங்கள்........................................... என முறிந்தன
   1. கடகட 2. சடசட 3. மடமட 4. வளவள

7) அம்மா சோறு சமைப்பதற்காக.......................... வைத்தார்
   1.உளை 2. உழை 3. உலை 4. வளை

8) குதிரை கனைக்கும் என்பது போல யானை
   1. உறுமும் 2. பிளிறும் 3. கீச்சிடும் 4. கத்தும்

9) ரெலஸ் கோப் (Telescope) மூலம் பொருட்களை அவதானித்தார்கள். இங்கு ரெலஸ்கோப் என்பதன் தமிழ் வடிவம்
   1. திசையறிகருவி 2. பரிசோதனை 3. நுணுக்குக்காட்டி 4. தொலைநோக்கி

10) தமிழில் எத்தனை வேற்றுமைகள் உள்ளன.
   1. ஆறு 2. எட்டு 3. ஒன்பது 4. ஏழு

11) இலங்கையின் வடக்கு இந்தியா இது என்ன வேற்றுமைப் பொருளைக் காட்டுகின்றது.
   1. நீங்கல் 2. எல்லை 3. ஒப்பு 4. ஏது



kalvi.lk

12) வாழ்வதற்காக வாசி என்ற தலைப்பிலான கடிதத்தை எழுதியவர் யார்?
1. நேரு 2. காந்தி 3. சுபாஸ் 4. கல்கி

13) நாராய் நாராய் எனத் தொடங்கும் பாடலைப் பாடியவர் யார்?
1. சத்திமுற்றப்புலவர் 2. இளங்கோ 3. பாரதி4. கம்பர்

14) கிளி பழங்களை உண்டது. இதில் எழுவாய்
1. பழங்கள் 2. கிளி 3. உண்டது 4. இல்லை

15) காடும் காடு சார்ந்த இடமும் எவ்வாறு அழைக்கப்படும்.
1. குறிஞ்சி 2. மருதம் 3. முல்லை 4. நெய்தல்

16) பின்வருவனவற்றில் உயிர்க் குற்றெழுத்துக்கள்
1. அமா 2. ஆஊ 3. இஎ 4. ஔகா

17) பாடகன் என்பதன் எதிர்பாற் சொல்
1. பாடகி 2. மனைவி 3விதவை 4. பாணி

18) சேவல் என்பதன் பெண்பாற் சொல்
1. நாடு 2. பிடி 3. பேடு4. பிணை

19) காந்தியடிகளின் சுயசரிதையைக் கூறும் நூல்
1. சத்தியசோதனை 2. கவிதைத்தொகுப்பு 3. மலரும் மாலையும் 4. பாரததேசம்

20) தமிழில் இருக்கும் உயிர் மெய்எழுத்துக்கள்
1. 12 2. 18 3. 216 4. 247

(20 x 1 = 20 புள்ளிகள்)

## பகுதி II

(1) நீர் செய்த கணிப்பீடு ஒன்றின் பெயரைத் தருக?
(2) அதற்கு ஆசிரியர் வழிகாட்டிய வழிகாட்டல்கள் 2 தருக.
(3) நீர் அந்தக் கணிப்பீட்டை எவ்வாறு செய்தீர்?
(4) உமக்கு அந்தக் கணிப்பீடு மூலம் கிடைத்த நன்மைகள் 2 தருக.
(5) நீர் கணிப்பீட்டை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தியவை எவை?
(6) நீர் கணிப்பீட்டுக்காக உதவிகள் பெற்றது யாரிடம்?

(15 புள்ளிகள்)

**01) பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களில் கட்டுதரை எழுதுக.**
1. நான் விரும்பும் பெரியார்
2. நான் கண்ட இயற்கை காட்சி
3. எமது பாடசாலை
4. விஞ்ஞானத்தின் வளர்ச்சி

(20 புள்ளிகள்)



kalvi.lk

**02) உமது பாடசாலையில் நடைபெற்ற கலைவிழா தொடர்பாக உமது நண்பனுக்கு 75 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.**

(10 புள்ளிகள்)

03)

1. வியாபாரி மகன் மீது கோபம் கொண்டமைக்கான காரணம் யாது?
2. கூண்டுக் கிளி பாடலை இயற்றியவர் யார்?
3. ஒரு பாட்டினால் சிறப்புற்றவன் என சத்துருக்கன் ஏன் சிறப்பிக்கப்படுகின்றான்?
4. புறவைகளின் இசைவாக்கம் என்ற கட்டுரையை எழுதியவர் யார்?
5. பெயர்ச் சொற்களின் வகைகளைக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

04) பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்குக.

(1) படி (2) அறை (3) நிலை
(4) மகிழ் (5) பணி (6) அணி

(03 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

## தரம் 6,7,8

# தமிழ்

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் தமிழ் பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**மாதக் கட்டணம்**

**850/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page